

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.11.2025) புதுடெல்லியில் நடைபெற்ற ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவினையொட்டி அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியில், இந்திய ஹாக்கி அணி பல்வேறு ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்ற தருணங்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க புகைப்படங்களை பார்வையிட்டு, ஹாக்கி இந்தியா நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய ஹாக்கி சங்க தலைவர் திலிப் திர்கி, செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (7.11.2025) புதுதில்லியில் ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவினையொட்டி நடைபெற்ற காட்சி போட்டியில் பங்கேற்ற இந்தியாவின் முன்னணி ஹாக்கி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சர்வதேச ஹாக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ தயாப் இக்ரம், இந்திய ஹாக்கி சங்கத் தலைவர் திலீப் திர்கி, இந்திய ஹாக்கி சங்கச் செயலாளர் போலநாத் சிங் உள்பட புகழ்பெற்ற பழம்பெரும் ஹாக்கி வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் போட்டி நடத்த ரூ. 70 கோடி ஒதுக்கீடு

# சென்னை - மதுரையில் ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டிகள்!

## புதுடெல்லியில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

புதுடெல்லி,நவ.8-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதுடெல்லியில் ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவினையொட்டி நடைபெற்ற காட்சிப் போட்டியில் பங்கேற்ற இந்தியாவின் முன்னணி ஹாக்கி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகளை வழங்கினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.11.2025) புதுடெல்லியில் ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவினையொட்டி நடைபெற்ற காட்சிப் போட்டியில் பங்கேற்ற இந்தியாவின் முன்னணி ஹாக்கி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

முன்னதாக, ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவினையொட்டி அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியில், இந்திய ஹாக்கி அணி பல்வேறு ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற்ற தருணங்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க புகைப்படங்களை பார்வையிட்டு, ஹாக்கி இந்தியா நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (5.11.2025) அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், அறிமுகப்படுத்திய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14-வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பைப் போட்டிக்கான வெற்றி கோப்பை, அதன் சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக இன்று புதுடெல்லியில் நடைபெற்ற ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் காட்சிப் படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

ஹாக்கி இந்தியாவின் பெருமையும், மதிப்புமிக்க இந்த நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.




தமிழ்நாடு ஹாக்கியில் ஒரு வளமான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. நமது மாநிலத்தைச் சேர்ந்த பல ஹாக்கி வீரர்கள் ஒலிம்பிக் மற்றும் உலகக் கோப்பைகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளதோடு, நாட்டின் சில சிறந்த வெற்றிகளுக்கு பங்களித்துள்ளனர்.

வீரர்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், மதிப்புமிக்க ஹாக்கி போட்டிகளை நடத்தும் நீண்ட பாரம்பரியத்தையும் தமிழ்நாடு கொண்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் சாம்பியன்ஸ் டிராபியையும், அடுத்ததாக சாம்பியன்ஸ் டிராபி 2005 ஆம் ஆண்டிலும், 2007 ஆம் ஆண்டு ஆசிய கோப்பையையும், 1999 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் தொடரையும், 2008 ஆம் ஆண்டு இந்தியா-பெல்ஜியம் தொடரையும் சென்னையில் நடத்தியது.

கிட்டத்தட்ட 16 ஆண்டுகளுக்குப் பிறகு, 2023 ஆம் ஆண்டு 7வது ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபியுடன், ஹாக்கி சென்னைக்குத் திரும்பியது. உலகின் முதல் பாலிகிராஸ் பாரிஸ் ஜிடி ஈகோ டர்ஃபில் போட்டிகள் நடத்தப்பட்டன, ஜிடி ஈகோ டர்ஃப் பின்னர் 2024 ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கில் இடம்பெற்றது.

இந்திய அணிக்கு ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் என்பது மைதானத்தில் கிடைத்த வெற்றி மட்டுமல்ல, ஹாக்கி விளையாட்டு மீதான நமது மக்களின் ஆர்வத்தை மீண்டும் தூண்டிய தருணம்.

இப்போது, மற்றொரு வரலாற்று அத்தியாயத்தில் நாம் அடியெடுத்து வைக்கிறோம். 2025 ஆம் ஆண்டு FIH ஆண்கள் ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டியை நடத்த தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

முதல் முறையாக, அனைத்து கண்டங்களிலிருந்தும் மொத்தம் 24 நாடுகளின் அணிகள் சென்னை மற்றும் மதுரை ஆகிய இரண்டு வெவ்வேறு நகரங்களில் நடைபெற உள்ள 72 பரபரப்பான போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளன.

நமது முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஆண்கள் ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டியை வெற்றிகரமாக நடத்துவதற்காக சுமார் 70 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும், ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, நாங்கள் ஹாக்கி விளையாட்டை தமிழ்நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டு செல்கின்றோம்.

ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சி தற்செயலாக ஏற்பட்டதல்ல. இது நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் விளைவாகும், அவர் தமிழ்நாட்டை ஒரு உண்மையான விளையாட்டு மாநிலமாக மாற்ற உறுதிபூண்டுள்ளார்.




இன்று, மாநிலம் முழுவதும் 11,000 க்கும் மேற்பட்ட ஹாக்கி வீரர்கள் பள்ளிகள் அளவிலான போட்டிகள், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள், பல்கலைக்கழக விளையாட்டு போட்டிகள் மற்றும் பல ஹாக்கி போட்டிகளில் பங்கேற்கின்றனர் என்று தெரிவிப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

எங்கள் முயற்சிகள் உண்மையிலேயே பலனளிக்கின்றன, மேலும் வரும் ஆண்டுகளில் இது விளையாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் காண நாங்கள் உற்சாகத்துடன் எதிர்நோக்கி இருக்கின்றோம்.

ஹாக்கி இந்தியா தனது புகழ்பெற்ற பயணத்தைத் தொடரவும், இந்தியா உலகின் ஹாக்கி தலைநகராகத் தொடரவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹாக்கி இந்தியாவின் அனைத்து எதிர்கால முயற்சிகளும் சிறப்பாக வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

### துறைமுகம் – இராயபுரம் மண்டலத்தில்

## ரூ. 6.82 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகள்!

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. திறந்து வைத்தனர்!

சென்னை, நவ.8-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (07.11.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலத்தில் ரூ.2.05 கோடி மதிப்பில் 4 முடிவுற்ற திட்டப் பணிகளைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.4.77 கோடி மதிப்பில் முதல்வர் படைப்பகத்திற்கான கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் இராயபுரம் மண்டலம், வார்டு-55க்குட்பட்ட சண்முகம் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.45 இலட்சம் மதிப்பில் 694.02 சதுர அடி பரப்பளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடத்தினை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, ஏழுகிணறு தெருவில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.95 இலட்சம் மதிப்பில் 2,818 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் புதியதாக கட்டப்பட்டுள்ள



அண்ணாநகர் மண்டலம், வார்டு–99க்குட்பட்ட திடீர் நகர், பிரிக்ளின் சாலையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.10 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட 2 புதிய உயர்கோபுர மின்விளக்குகளை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். இதில் மேயர் திருமதி ஆர்.பிரியா, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

நியாய விலை கடைகள், குழந்தைகள் மையம் மற்றும் மாநகராட்சி அலுவலகம், உதவி பொறியாளர் அலுவலகம், மாமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்நோக்கு மையக் கட்டடத்தினை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர். இதில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு துறையின் நியாய விலைக்கடைகளிலும் குடும்ப அட்டை தாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர்.

பின்னர், வார்டு-54க்குட்பட்ட வால்டாக்ஸ் சாலை, வ.உ.சி சாலையில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.55 இலட்சம் மதிப்பில் 1,050 சதுர அடி பரப்பளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடத்தினை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து, வார்டு-58க்குட்பட்ட சூளை, ராஜா முத்தையா சாலையில் உள்ள கண்ணப்பர் திடலில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியில் ரூ.4.77 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள முதல்வர் படைப்பகத்திற்கான கட்டத்திற்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

பின்னர், அண்ணாநகர் மண்டலம், வார்டு-99க்குட்பட்ட திடீர் நகர், பிரிக்ளின் சாலையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.10 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட 2 புதிய உயர்கோபுர மின்விளக்குகளைப் அப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர். பிரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), எச்.ஆர். கௌஷிக், (மத்தியம்), மண்டலக் குழுத் தலைவர்கள் பி.ஸ்ரீராமுலு, கூ.பி.ஜெயின், நியமனக்குழு உறுப்பினர் சொ. வேலு, உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் திருமதி கற்பகவள்ளி, வடசென்னை கூட்டுறவு துணை பதிவாளர் திருமதி சுதா மாமன்ற உறுப்பினர்கள் ல. தாஹா நவீன், திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதி இளம்சுருதி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்டத்தில் உள்ள

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு சிறப்புரை!

சென்னை,நவ.8-

சென்னை கிழக்கு மாவட்டத்தில் உள்ள மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் - மாவட்டத் தலைவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று 7.11.2025 சென்னை, ஒட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையிலுள்ள எம்.கே.டி மஹாலில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் எஸ்.ஐ.ஆர். எதிர்த்து எதற்காக தோழமைக் கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என்பதை விளக்கி கூறி உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மேயர் பிஆர்.ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் பா.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே மூர்த்தி, கூ.பி. ஜெயின், பி. ஸ்ரீராமுலு, பகுதி செயலாளர் தமிழ் வேந்தன், எம்.சாமி கண்ணு, மற்றும் தோழமைக் கட்சிகளின் மாவட்ட கழக செயலாளர்கள் முறையே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி கொளத்தூர் தொகுதி வில்லிவாக்கம் தொகுதி மாவட்ட தலைவர் ஜெ. டில்லி பாபு, துறைமுகம் தொகுதி மாவட்டத் தலைவர் திரு சிவ ராஜசேகர், அம்பத்தூர் தொகுதி மாவட்ட பொறுப்பாளர் திலகர், எழும்பூர் தொகுதி வில்லிவாக்கம்



தொகுதி மாவட்ட பொறுப்பாளர்கள் புத்தநேசன் சுரேஷ்பாபு அலி சி.பி.எம் கட்சி கொளத்தூர் தொகுதி, திரு.வி.க.நகர் தொகுதி, அம்பத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் சுந்தர்ராஜன், துறைமுகம் தொகுதி எழும்பூர் தொகுதி வில்லிவாக்கம் தொகுதி மாவட்டச் செயலாளர் செல்வா. சி.பி.ஐ கட்சி துறைமுகம் தொகுதி, எழும்பூர் தொகுதி, வில்லிவாக்கம் தொகுதி மாவட்ட செயலாளர் வரதன், கொளத்தூர் தொகுதி திரு.வி.க.நகர் தொகுதி செயலாளர் திரு வெங்கடேஷ் வேம்புலி மதிமுக கட்சி துறைமுகம் தொகுதி, எழும்பூர் தொகுதி, வில்லிவாக்கம் தொகுதி, கொளத்தூர் தொகுதி, திரு. வி.க.நகர் தொகுதி, மாவட்டச் செயலாளர் சு.ஜீவன், அம்பத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் விடுதலை சிறுத்தைகள் கட்சி, துறைமுகம் தொகுதி எழும்பூர் தொகுதி மாவட்ட செயலாளர் இளங்கோ, திரு.வி.க.நகர் தொகுதி மாவட்டச் செயலாளர் திருமதி உஷாராணி, கொளத்தூர் தொகுதி வில்லிவாக்கம் தொகுதி மாவட்டச் செயலாளர் அப்பூன். அம்பத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் ஞான முதல்வன் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி மாவட்டச் செயலாளர் கோதர்ஷா, மனிதநேய மக்கள் கட்சி துறைமுகம் தொகுதி எழும்பூர் தொகுதி வில்லிவாக்கம் தொகுதி மாவட்டச் செயலாளர் தாஹா எல். நவீன், கொளத்தூர் தொகுதி திரு.வி.க.நகர் தொகுதி மாவட்டச் செயலாளர் நசீர்,அம்பத்தூர் தொகுதி மாவட்ட செயலாளர் அப்துல் காதர், திராவிடர் கழகம் மாவட்டச் செயலாளர் அன்பு, தமிழக வாழ்வுரிமை கட்சி மாவட்டச் செயலாளர் திஅப்துல் சாதிக் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் எட்வின் ராஜதுரை கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி மாவட்ட செயலாளர் மாவட்ட செயலாளர் திரு. இசை பாலு மற்றும் தோழமைக் கட்சிகளின் பகுதி தலைவர்கள் பகுதி செயலாளர் கழக செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.